TNTU080006602021

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| Name | முருகேசன் | Village | கிருஷ்ணாபுரம் |
|---|---|---|---|
| Father's Name | மணிராஜன் | Taluk | வாணியம்பாடி |
| Age | 45 | Calling | தனியார் வேலை |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **03.09.2026**

**O.S. No.135/2021** **வா.சா.1** **02.01 PM – 02.09 PM**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** –

1. நான் கிருஷ்ணாபுரம் இருளர் வட்டத்தில் தான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆனால் வழக்கில் நான் உம்மையப்பநாயக்கனூர் கிராமத்தில் வசிப்பதாக வழக்கில் எதற்காக தெரிவித்து இருக்கிறேன் என்று சொன்னால் நான் அவ்வாறு சொல்லவில்லை. இந்த வழக்கை தாக்கல் செய்த சமயம் தாவா சொத்தின் மொத்த சந்தை மதிப்பு இருக்கும் என்று சொன்னால் ரூ.4 லட்சம் கொடுத்து வாங்கினேன். அப்படி என்றால் என்னுடைய மதிப்பு எவ்வளவு என்றால் இரு மடங்கு ஆகியிருக்கும்.

2. என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட பத்திரத்தில் எவ்வளவு மதிப்பு குறிப்பிட்டு இருக்கிறேன் என்று சொன்னால் ரூ.40,000 ம் போட்டுள்ளேன். நான்கு லட்சம் ரூபாய் பணத்திற்கு வாங்கிய சொத்தை 40,000 ரூபாய்க்கு குறிப்பிடவதற்கு என்ன காரணம் என்றால் கவர்மெண்ட் வேல்யூவேஷன் படி நாற்பதாயிரம் ஆனால் நான் கொடுத்த விலை 4 லட்சம் என்று சாட்சி கூறுகிறார். என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் சரியான பிரதிபலனுக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் இல்லை என்றாலும் என்னுடைய மகள்களின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் எனது மச்சானுடன்

சேர்ந்து போர்ஜரியாக ஒரு ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

3. ஏற்கனவே நான் ஒப்புக்கொண்டு குறியீடு செய்யப்பட்டுள்ள அ.வ.எண்.98/2024 –லின் வழக்குரை பி.வா.சா.ஆ.1–ல் உள்ள சங்கதிகள் தான் சரியானது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN
DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.